அப்படிப்பட்ட சலுகைகள் தரப்படுகின்றன. ஆகவே நெல் வகைகளுக்கும் அப்படிப்பட்ட சலுகைகளைத் தருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கொடுக்கப்படுகிற ஸ்ப்ரேயர்கள் இனுமாகவோ அல்லது மானியமாகவோ கொடுக்கப் படுவதில்லை. 17 ஆயிரம் பவர் ஸ்ப்ரேயர்கள் இருக்கின்றன. இந்த ஆண்டும் ஒரு ஆயிரம் அதிகமாகக் கூட்டுவதாக இருக்கிறேம். 72 ஆயிரம், கையினுல் தெளிக்கின்ற, கைத் தெளிப்பான்கள், இருக் கின்றன. அந்த அந்த வட்டாரங்களில் வைத்துக்கொண்டு குறைந்த பட்ச வாடகைக்குக் கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்துகொண்டு வருகிறேம்.

அம்பாசமுத்திரம் அரிசி ஆராய்ச்சி நிலையம்

*619 வினு—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

அம்பாசமுத்திரத்தில் உள்ள அரிசி ஆராய்ச்சி நிலையம் தற்சமயம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இது அம்பாசமுத் திரத்தைப் பொறுத்தது, அதுபற்றிய விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டு இருக்கிறது

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் விளைவாக மக்களுக்கு என்ன என்ன நன்மைகள் கிடைக்கின்றன என்பதை ஆராய்வதற்காகப் புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டனவா ? இந்த ஆராய்ச்சியில் செலவழிக்கப்படும் செலவு பயனுள்ளதாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : அம்பாசமுத்திரத்தில் நடத்தப்படுகிற ஆராய்ச்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய தொகுதிக்கு மிக அருகிலே அது இருக்கிற கார ணத்தினுலே பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 356-358-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1974 மார்ச் 26]

அவர்கள் நல்ல முறையிலே கண்டுபிடிப்புகளைச் செய்திருக்கிருர்கள். ஏ.எஸ்.டி. 1-லிருந்து ஏ.எஸ்.டி. 14 வரையிலே கார் என்று சொல்வார்கள், அதாவது குறுவை கண்டுபிடித்திருக்கிருர்கள். அம்பாசமுத்திரம் இரண்டு ரக நெல் 3 டன்னுக்குக் குறையாமல் விளைகிறது ஒரு ஏக்கருக்கு.

அது மட்டுமல்லாமல் 110 நாட்களுக்குள் விளைகிறது. மிக நல்ல அரிசி, செக்கச் செவேரென்ற அரிசி, ப்ளட் ரைஸ், ரத்தத்திற்குத் தேவையான நல்ல அரிசி, அதை மற்ற மாவட்டங்களும் பரப்ப வேண்டுமென்று கருதுகிருேம். அம்பாசமுத்திரம் 1 ரக நெல் நீண்டகாலமாக தாம்பிரவருணி நதி தீரத்திலே பயிரிடப்பட்டு வருகிறது. அதைவிட அம்பாசமுத்திரம் இரண்டு ரக நெல்தான் மிக நல்லது. நல்ல விளைச்சல் கொடுக்கக்கூடியது. குறைந்த நாளிலே விளையக்கூடியது. ஆனுல் கார் காலமாக இருந்தால்தான் விளையும்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக நாம் கண்டுபிடித்து இருக்கின்ற உண்மைகளை விவசாயிகள் எல்லோரும் நல்ல முறையிலே அறிந்து கொள்ளக்கூடிய முறையில் என்னென்ன முறைகள் மூலமாக அரசாங்கம் அவர்களுக்குத் தெரிவிக்கின்றது, தனிப்பட்டவர்கள் சிலர் அபரிமிதமான விளைச்சலைச் செய்து பரிசுகளைப் பெற்றிருக்கிருர்கள். அவர்கள் கையாண்ட முறைகளையும் மற்ற விவசாயிகளுக்கு தெரிவிக்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: அம்பாசமுத்திரம் ரகத்தைப்பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். அது மட்டுமல்லாமல், சினிமா படங்கள்மூலமாக விளம்பரப்படுத்த 2 லட்சம் ரூபாய் இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கியிருக்கிருேம், அதை அவர்கள் எல்லாம் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். சினிமாப் படம், துண்டுப் பிரசுரம், புத்தகம் இவைகளின் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. குறிப்பாக அம்பாசமுத்திரம் ரகங்களைப்பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். அம்பாசமுத்திரம் 2 அல்லது 1வது ரக நெல்லில் இருக்கிற விசேடம் என்ன என்ருல், மேலே இருக்கிற உமி மிகச் சன்னமாக இருக்கும். தஞ்சையைப்போல் திக்காக இருக்காது. சன்னமாக இருப்பதால் 100 டன் நெல்லுக்கு 75 டன்

[1974 மார்ச் 26

மாயூரத்திற்குப் புதிய பெயர்.

அரிசி கிடைக்கிறது. அதாவது அவுட் டர்ன் அதிகமாக வருகிறது. அதனால் அதை மற்ற மாவட்டங்களுக்கும்கூடப் பரப்பலாம் என்ற கருத்தைத் தெரிவித்தேன்.

* 620 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தின் தற்போதைய பெயரை மயிலாடுதுறை என மாற்றி அமைக்கக் கோரி மாயூரம் நகராட்சி 1973 ஆகஸ்டு மாதத்தில் தனது கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாயூரத்தின் தற்போதைய பெயரை மயிலாடுதுறை என மாற்றி அமைக்கக் கோரி மாயூரம் நகராட்சி அதனுடைய எண். 285, 3—8—73 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருக்கிறது. மாயூரம் நகராட்சி அதுகுறித்து பொதுமக்களுடைய ஆட்சேபணை கேட்கப்படவில்லை என்று கூறியிருக்கிறது. வருவாய்த் துறை ஏடுகளிலே பெயர் மாற்றத்தைப் பதிவுசெய்யவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அதுபற்றிக் கருத்துரை வழங்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார். அதுபற்றி அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : பல ஊர்களுடைய பெயர்கள் பண்டைக் காலத்தையொட்டி அமைந்த பெயர்களாக இருக்கின்றன, அப்பொழுது இடப்பட்ட பெயர்கள் இன்றைய மக்களின் சிந்தனைக்கும் கருத்துக்கும் பொருத்தமாக இல்லாத காரணத்தினால்—சில ஊர்களினுடைய பெயர்கள் காலத்தால் திரிந்தும் வேறு பெயர் மாறியும் இருக்கின்ற காரணத்தினால்—உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் எனது பகுதியாகிய பள்ளப்பட்டி என்ற பெயரை எடுத்துக்கொள்ளலாம், இந்தக் காலத்து மக்களின் கருத்துக்கும், சிந்தனைக்கும் கௌரவத்திற்கும் உகந்ததாக இல்லை. அப்படி உள்ள இடங்களிலே எல்லாம் மொத்தமாக—ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு ஊருக்கும் பெயர்மாற்றம் செய்வதால் வருவாய்த் துறைக்கு அதிக செலவாகும் என்ற காரணத்தினால்

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS